# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination – 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம்<br>Political Science | Three Hours<br>Gr -12 (2022) | 23 | T | I, II |

**அறிவுறுத்தல்கள்**

- ❖ இவ்வினாத்தாள் வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ இதில் வினாப்பத்திரம் I ஆனது பகுதி A, பகுதி B என்னும் இருபகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி A ஆனது 20 பல் தேர்வு வினாக்களையும் பகுதி B ஆனது 10 குறுவிடை வினாக்களையும் கொண்டுள்ளது. இவற்றுக்கு இவ்வினாத்தாளில் விடையளிக்கவும்.
- ❖ இவை ஒவ்வொன்றுக்கும் தலா 02 புள்ளிகள் வீதம் 60 புள்ளி வழங்கப்படும்
- ❖ வினாப்பத்திரம் II ஆனது 04 வினாக்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் விரும்பிய 02 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

### வினாப்பத்திரம் - I
### பகுதி A

❖ *1 தொடக்கம் 08 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

01. அரசியல் என்பது
   1) சமூக உயர்வரப்பிரசாதங்களை பெற்ற நபர்களின் செயற்பாடு மட்டுமாகும்.
   2) தொழில்சார் அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வு ஆகும்.
   3) அரசியல் அதிகாரத்தோடும் அதன் பிரயோகத்தோடும் தொடர்பான செயற்பாடாகும்.
   4) ஜனநாயக வழிமுறைகளுடன் சாத்தியப்படும் ஒரு செயற்பாடு மட்டுமாகும்.
   5) தேர்தல் செயல்முறையுடன் வரையறுக்கப்பட்ட செயற்பாடாகும். ( )

02. அரசியலை கற்பதென்பது
   1) அதிகார போராட்டம் பற்றிய கற்கையுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும்.
   2) பிரயோக அரசியல் செயற்பாட்டுடன் வரையறுக்கப்பட்ட ஒரு துறையாகும்.
   3) விஞ்ஞான ரீதியிலான பரிசீலனையுடன் மாத்திரம் இனங்காணப்படுகிறது.
   4) நெறிமுறைசார் விடயங்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
   5) பிரயோக அரசியல் மற்றும் கோட்பாட்டு அரசியல் ஆகிய இரு வழிகளுடனும் தொடர்புபட்டதாகும். ( )

03. அரசு என்பது
   1) ஏனைய சமூக நிறுவனங்களுக்கு மத்தியில் உள்ள ஒப்பற்ற ஒழுங்கமைப்பாகும்
   2) அரசாங்கத்தின் கருவியாகும்.
   3) கிரேக்க காலத்தில் நகர அரசாக முதலில் ஆரம்பமாகியது.
   4) அரசாங்கம் என்பதற்கு இணையானதொரு பதமாகும்.
   5) வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது சமூகத்திற்கு மேம்பட்டதாகும். ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

04. அரசாங்கமென்பது

1) தொடர்ச்சியான, நிரந்தர இருப்பினைக் கொண்ட அதிகார கட்டமைவாகும்.
2) அரசின் அதிகாரங்களையும், பணிகளையும் புரிவதற்கு பொறுப்பாக்கப்பட்ட அரசின் முகவராகும்.
3) அரசின் ஆள்புலத்தில் வாழும் சகல மக்களையும் கொண்ட ஒரு மானிட சமூகமாகும்.
4) குடிகள் மீது பலவந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கும் எண்ணக்கருவாகும்.
5) கட்டாயமான உறுப்புரிமையைக் கொண்ட அரசியல் ஸ்தாபனமாகும். ( )

05. அரசியல் விஞ்ஞானத்தை ஆய்வு செய்யப் பயன்படும் அணுகுமுறைகளையும் அவற்றின் பண்புகளையும் சரியாக காட்டுவது.

1) தத்துவார்த்த அணுகுமுறை – அனுபவ வாதத்தின் அடிப்படையில் அரசியலை கற்றல்.
2) ஒப்பீட்டு அணுகுமுறை – வேறுபட்ட பன்மை கலாச்சாரங்களை ஒப்பிடுவதன் மூலம் அரசியலை கற்றல்.
3) சமூகவியல் அணுகுமுறை – அவதானிக்கக்கூடிய அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்தல்.
4) நடத்தைவாத அணுகுமுறை – நுட்பமுறைகளைக் காட்டிலும் விளைவுகளில் கவனம் செலுத்துகின்றது.
5) பெண்ணியல்வாத அணுகுமுறை – பெண் துன்புறுத்தல்களை ஆய்வு செய்கின்றது. ( )

06. அரசியல் கட்சிகள் என்பது

1) அனைத்தாண்மை முறைகளில்கூட பூரண செயற்பாட்டு சுதந்திரத்தை அனுபவிக்கின்றன.
2) வரையறுக்கப்பட்ட நலன்களை மேம்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் குழுக்களாகும்.
3) உத்தியோக பூர்வமான அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட ஒழுங்கமைப்புக்களாகும்.
4) சர்வதேச அரசியலின் பிரதானமான செயற்பாட்டாளராக விளங்குகின்றன.
5) அரசாங்கத்தில் இருந்து மக்களை அந்நியப்படுத்தும் ஒழுங்கமைப்புக்களாகும். ( )

07. அமுக்கக் குழுக்கள் என்பது

1) அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அரசியல் கட்சிகளுடன் போட்டியிடுகின்றன.
2) இதன் பன்மை தன்மை ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அபிவிருத்தியாகும்.
3) ஆட்சி முறையில் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.
4) அனைத்தாண்மை முறைகளில் செல்வாக்குமிக்க தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.
5) பிழையானதும், அடிப்படை அற்றவையுமான தகவல்களை வழங்கி அரசாங்கத்தை வழி தவற செய்கின்ற ஒழுங்கமைப்புகளாக மாற்றமடைந்துள்ளன. ( )

08. இறைமை என்பது

1) அரசுக்கு மட்டுமே உரிய மீயுயர் அதிகாரமாகும்.
2) நவீன அரசுகளில் இறைமை நீதிமன்றுகளால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
3) பலமான அரசுகளை பலவீனமான அரசுகளில் இருந்து வேறுபடுத்த உதவும் ஓர் அளவு கோலாகும்.
4) ஒற்றையாட்சி அரசுகளில் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.
5) இஸ்பரிசிக்கக்கூடிய, கட்புலனாகும், ஒரு மானசீகமான எண்ணக் கருவாகும். ( )



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

❖ **09 தொடக்கம் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான கூற்றுக்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் சரியான கூற்றுக்களை அல்லது கூற்றுக்களின் தொகுதியை கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

09. ஒற்றையாட்சி அரசாங்கமுறையின் பண்புகளாவன.

A. இறைமை அதிகாரமானது தனியான தேசிய மையநிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

B. மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படும்.

C. ஒருமைத் தன்மையான சட்டம், நிறைவேற்றுமுறை, நீதி என்பன காணப்படும்

D. தேசிய அரசியலை நோக்கமாக கொண்டு தேசிய ஒருமைப்பாட்டினை விருத்தி செய்வதற்கு உதவுகின்றது.

E. வேற்றுமையோடு ஒற்றுமையை ஒன்றிணைக்கும் அரசாங்க முறையாக காணப்படல்.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE ( )

10. பாராளுமன்ற அரசாங்க முறையொன்றில்

A. அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஒன்றாக காணப்படும்.

B. அரசாங்கம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவிலேயே தங்கியிருக்கும்.

C. பொதுவாக சட்டமன்றத்தின் பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற கட்சியின் உறுப்பினர்களில் இருந்து நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுதல்.

D. ஜனாதிபதி முறையுடன் ஒப்பிடும் பொழுது அதிக ஜனநாயகத் தன்மையும் குறைந்த செயற்திறனையும் கொண்டு காணப்படும்.

E. கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும் அரசாங்க முறையாக காணப்படுகிறது.

1. ABCD 2. ABCE 3. ABDE 4. ACDE 5. BCDE ( )

11. அரசியல் கருத்தியல் என்ற வகையில் தாராளவாதமானது.

A. யாப்புறு அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றது.

B. தனியாள் சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.

C. அரசாங்க தனியுரிமை அதிகாரத்தை ஊக்குவிக்கின்றது.

D. உற்பத்திக் கருவிகளில் பொதுவுடைமையை வலியுறுத்துகிறது.

E. திறந்த சந்தை பொருளாதாரத்தை வலியுறுத்துகின்றது.

1. ABCD 2. ABD 3. ACD 4. ABE 5. BCDE ( )

12. சமதர்மவாத கருத்தியலானது

A. கூட்டு நன்மையைத் தனிப்பட்டோரின் நன்மைக்கு மேலானதாக வலியுறுத்துகின்றது.

B. பொருளாதாரத்தில் அரசின் தலையிடாமையை வலியுறுத்துகின்றது.

C. மாக்சினதும், லெனினதும் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலாக காணப்படுகின்றது.

D. உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் பற்றிய தனியார் உடமையை முழுமையாக எதிர்கின்றது.

E. போட்டிக்கட்சி அரசியலை ஊக்குவிக்கின்றது.

1. A மற்றும் B 2. B மற்றும் C 3. A, C மற்றும் D

4. A மற்றும் D 5. B மற்றும் E ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

13. முரண்பாட்டு நிலை மாற்றத்தின் மூலம்

A. முரண்பாட்டின் நோக்கம், தன்மை, அபிலாசை என்பன நிலைமாற்றமடைதல்.

B. முரண்பாட்டிற்கு மையமாக அமையும் பிரச்சினைகள், நிகழ்ச்சி நிரல்கள் நிலைமாற்றமடைதல்.

C. முரண்பாட்டு தரப்புக்களின் நடத்தைகளில் நிலைமாற்றம் ஏற்படல்.

D. முரண்பாட்டின் விதி முறைகள் நிலைமாற்றமடைதல்.

E. முரண்பாட்டின்போது அழிவடைந்த பிரதேசம், சமூகத்தை மீள் கட்டமைப்பிற்கு உட்படுத்தல்.

1. ABCD  2. ABCE  3. ABDE  4. ACDE  5. BCDE  (  )

14. முரண்பாட்டின் சாதகமான செயற்பாடுகளாக அமைபவை.

A. முரண்பாடுகள் மூலம் சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் இருப்பது தவிர்க்கப்படுகின்றமை.

B. முரண்பாடுகள் சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவையை வலியுறுத்துகின்றது.

C. முரண்பாடுகள் யுத்தம், ஆயுதபரிகரணம், அணுவாயுத பிரயோகத்திற்கு வழிவகுக்கின்றது.

D. முரண்பாடுகள் தனிநபர்களும், சமூகமும் மாற்றமடைய வழிவகுக்கின்றது.

E. முரண்பாடுகள் சமூகக் குழுக்களின் ஒற்றுமைத் தன்மையை வலியுறுத்துகின்றது.

1. ABCD  2. ABCE  3. ABDE  4. ACDE  5. BCDE  (  )

15. 1833 ஆம் ஆண்டினை இலங்கையின் அரசியல் யாப்பு அபிவிருத்தியில் ஒரு முக்கிய கட்டமாக கருதப்படுவதற்கு காரணம்.

A. சுதந்திரமான நீதிச்சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டமையினாலாகும்.

B. சட்டமன்றம், நிறைவேற்றுச்சபை ஆகியன தாபிக்கப்பட்டமையினாலாகும்.

C. தேசாதிபதியின் தலையீட்டில் இருந்து விடுபட்ட நீதித்துறை தாபிக்கப்பட்டமையினாலாகும்.

D. சலக வர்த்தக ஏகபோக உரிமைகளும் ஒழிக்கப்பட்டமையினலாகும்.

E. இலங்கையர்களும் சிவில் சேவையில் நுழைவதற்கான கதவு திறந்து விடப்பட்டமையினாலாகும்.

1. ABCD  2. ABCE  3. ABDE  4. ACDE  5. BCDE  (  )

❖ **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாக பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 16. | கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்களின் கீழ் சட்ட நிரூபன சபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். | கோல்புறூக் கமரன் சட்ட நிரூபன சபை 09 உத்தியோக அங்கத்தவர்களையும் 08 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களையும் கொண்டிருந்தது. ( ) |
| 17. | டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் 61 அங்கத்தவர்களைக் கொண்டதொரு அரசாங்க சபை (அரசுக்கழகம்) ஸ்தாபிக்கப்பட்டது. | அரசாங்க சபை 50 தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் 08 நியமன அங்கத்தவர்களையும் 03 அரசாங்க உத்தியோகத்தர்கள் எனும் மூன்று வகையான 61 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. ( ) |
| 18. | சோல்பரி யாப்பின் கீழ் சட்டசபையானது ஈரங்க மன்றமாக காணப்பட்டது. | சோல்பரி யாப்பின் கீழ் செனற் சபை மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட 15 அங்கத்தவர்களையும் கீழ் சபையால் நியமிக்கப்பட்ட 15 உறுப்பினர்களையும் உள்ளடக்கிய 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. ( ) |
| 19. | சோல்பரி யாப்பின் கீழ் பிறிவிக்கவுன்சில் (கோமறைக்கழகம்) நாட்டின் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாக பணியாற்றியது. | பிறிவிக் கவுன்சிலின் (கோமறைக்கழகம்) ஆலோசனைப்படி மகாதேசாதிபதி (ஆளுநர் நாயகம்) மகா இராணியால் நியமிக்கப்பட்டார் ( ) |
| 20. | முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை இயற்றிய சட்டங்களை நீதிமன்றங்கள் கேள்வி கேட்கவோ, மறுசீராய்வு செய்வதற்கோ அதிகாரம் பெற்றிருந்தன. | முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவையே மீயுயர் சட்டவாக்க அதிகாரசபையாக காணப்பட்டது. ( ) |

(20x2= 40 புள்ளிகள்)

## பகுதி B

21. “அரசியலைக் கற்றல்” என்பதில் **இரண்டு** அர்த்தங்கள் உள்ளன அவை இரண்டினையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

22. புராதன கிரேக்கத்தின் அரசியல் சிந்தனையாளர்கள் இருவர் அரசியல் விஞ்ஞான கற்கையினுடைய ஸ்தாபகர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் **இருவரினதும்** பெயர்களை குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

23. 1) "அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் பிரதான நோக்கமாகும்"

2) அரசியல் அதிகாரத்தை கையாளுபவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதனூடாக தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதில் கரிசனை காட்டுதல்"

இவ் இரு கூற்றுக்களுடனும் பொருந்தும் **இருவகை** ஒழுங்கமைப்புக்களையும் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

24. 1) "இவ் அரசியல் ஸ்தாபனம் ஆள்புலத்தில் வாழும் சகல பிரஜைகளதும் கட்டாய உறுப்புரிமையை கொண்டதாகும்"

2) இவ் அரசியல் ஸ்தாபனம் ஆள்புலத்தில் வாழும் பிரஜைகளுள் ஒரு பகுதியினரை மட்டும் உள்ளடக்கியிருப்பதோடு காலத்திற்கு காலம் மாறும் இயல்புடையதாகும்.

இவ் இரு கூற்றுக்களாலும் வெளிப்படுத்தப்படும் **இரண்டு** அரசியல் ஸ்தாபனங்களையும் முறையே குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

25. பின்வரும் பண்புகளுடன் பொருந்துகின்ற ஆட்சி முறைகள் **இரண்டினையும்** முறையே குறிப்பிடுக.

1) "பரம்பரைமுறையில் அரசத்துவத்திற்கு உரிமைகோரும் தனிநபர் ஆட்சி"

3) "பொது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் கொண்டு நடாத்தப்படும் ஆட்சி"

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

agaram.lk

26. பின்வரும் பண்புகளுடன் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் **இரண்டையும்** முறையே குறிப்பிடுக.

1) "அரச வழிபாடு"

2) "அரசு பற்றிய வர்க்க முறை விளக்கம்"

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

27. 1) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையிலான தொடர்புகள் சேய்மையானவையாக இருப்பதுடன் அதிகார பிரிவினைக் கோட்பாட்டிற்கு இணங்க இரு துறைகளும் சுயாதீனமான ஆட்சிப் பரப்பை கொண்டவையாகும்"

2) "நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையிலான தொடர்பு மிக நெருங்கியதாக இருப்பதோடு நிறைவேற்றுத்துறையின் இருப்பு சட்டத்துறையின் விருப்பிலேயே தங்கியுள்ளது"

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய **இரண்டு** அரசாங்க முறைகள் காணப்படுகின்றன. இவ்விரு அரசாங்க முறைகளையும் முறையே குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………



agaram.lk

28. முரண்பாட்டு தீர்வு செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஊடகங்கள் நான்கு காணப்படுகின்றன. இவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

*01.* ……………………………………………………………………………………………

*02.* ……………………………………………………………………………………………

29. காலனித்துவ ஆட்சியாளர்களால் இலங்கையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை காலத்திற்கு காலம் முன் வைப்பதற்கு பல காரணிகள் அடிப்படையாக அமைந்திருந்தன. அவற்றுள் **இரண்டு** காரணிகளை குறிப்பிடுக.

*1)* ……………………………………………………………………………………………

*2)* ……………………………………………………………………………………………

30. இலங்கையில் வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட **இரண்டு** அரசியலமைப்பு களின் பெயர்களை குறிப்பிடுக.

*1)* ……………………………………………………………………………………………

*2)* ……………………………………………………………………………………………

(10x2=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

## வினாப்பத்திரம் II

- ❖ **இவ்வினாப் பத்திரம் நான்கு வினாக்களைக் கொண்டதாகும். இவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்து விடை தருக.**

01. "அரசியல் என்பது பிரசைகளது சமூக வாழ்வின் ஓர் அங்கமாகும்" ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** பரிசீலிக்குக.

அ. அரசியல் கட்சிகளின் பணிகள்

ஆ. மந்திரி சபை அரசாங்க முறையின் நிறைகள் மற்றும் குறைகள்.

இ. சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகள்

ஈ. தாராளவாத அரசு

(10x2=20 புள்ளிகள்)

03. அ. பேராசிரியர் கிறிஸ்பேர்க் என்பவரின் "முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரத்தை" குறிப்பிட்டு அதன் படி நிலைகளை ஆராய்க? (10 புள்ளிகள்)

ஆ) உள்ளக முரண்பாடுகள் தோன்றுவதற்கான காரணிகளை ஆராய்க? (10 புள்ளிகள்)

04. இலங்கையின் காலனித்துவ நிலைமாற்றங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

அ. கோல்புரூக் மற்றும் கமரன் சிபார்சுகள்

ஆ. வாக்குரிமை

இ. சமூக மற்றும் பொருளாதார விளைவுகள்.

(10x2=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk